# யா/கரவெட்டி விக்னேஸ்வரா
# மீள் நினைவுகள்

தொகுப்பாசிரியர்:

வீ.ஏ. திருஞானசுந்தரம்
செயலாளர், கொழும்புக் கிளை

யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை

K. RAVIKUMAR
"KATHAMPAM"
PUNGADI, VATHIRY
KARAVEDDI

# யா/கரவெட்டி விக்னேஸ்வரா மீள் நினைவுகள்

**தொகுப்பாசிரியர்:**
**வீ.ஏ. திருஞானசுந்தரம்**
செயலாளர், கொழும்புக் கிளை

யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை

OLD STUDENTS ASSOCIATION
J/VIGNESWARA COLLEGE
KARAVEDDI

தலைப்பு: யா/கரவெட்டி விக்னேஸ்வரா - மீள் நினைவுகள்

தொகுப்பாசிரியர் : வீ. ஏ. திருஞானசுந்தரம்

முதற் பதிப்பு: ஜூலை 2012

வெளியீடு: யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிப்பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை,
16, இன்னர் பெயர்லைன் றோட், தெஹிவளை.
தொலைபேசி: 0112714393, 0773017848

அச்சு: ஆர்.எஸ்.ரி. என்ரபிறைஸஸ் (பி.) லிட்.
இல. 114, டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை,
கொழும்பு 6

Title : J/Karaveddy Vigneswara - Meel Ninaivugal
Compiled by : V. A. Thirugnanasuntharam

First Edition : July, 2012

Published by: Colombo Branch of the Old Students' Association of Vigneswara College, Karaveddy,
16, Innerfairline Road, Dehiwala.

Printed by: RST Enterprises(Pvt) Ltd,
No. 114, W.A. Silva Mawatha, Colombo 6

# தன்னேரில்லாத் தலைவன்



**20.07.1923 - 05.06.2002**

சமூகத்தின் மேன்மை தனைமூச்சாய்க் கொண்டே
இமைப்பின்றிப் பாடுபட்ட ஏந்தல் - அமரர்
'சிவா' மக்கள் தொண்டன் செயல்வீரர் இன்று
எவருள்ளார் அன்னார்க்கு நேர்

**- ஜின்னாஹ்**

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நுழையுமுன் சில வார்த்தைகள் | 05 |
| 2. | கிளைச்சங்கத்தின் கடந்தகாலச் செயற்பாடுகள் | 07 |
| 3. | எம் நெஞ்சங்களில் இறுகப்பதிந்த சிவா | 13 |
| 4. | மனிதநேயன் - சிவசிதம்பரம் மறைந்த வேதனையில் | 18 |
| 5. | தொட்டிற் பழக்கம் சுடுகாடுவரை | 21 |
| 6. | The hey days at Vigneswara | 27 |
| 7. | வரலாற்றில் ஓர் ஏடு | 33 |
| 8. | ஒரு பழைய மாணவியின் ஆதங்கம் | 37 |
| 9. | காலத்தால் தளராத தரிசனங்கள் | 41 |
| 9. | ஞான தினகரன் | 46 |


***

# நுழையுமுன் சில வார்த்தைகள்

நாம் கடந்த காலத்தில் நிகழ்ந்த மதிக்கப்பட வேண்டியனவற்றை மதிக்க வேண்டும். பழையன புதியனவற்றுக்கு ஊற்றுக்கண் என்று கொள்வதில்தான் நமது உயர்வு தங்கியிருக்கின்றது. பழைமையையும் புதுமையையும் புத்திசாலித் தனமாக இணைப்பதில் தான் சமுதாயத்தின் வெற்றி தங்கியுள்ளது.

பழைமை என்ற விளக்கை யெடுத்து
புதுமை என்ற திரியினைக் கொழுவி
ஆர்வமென்ற நெய்யினைப் பெய்து
வாழ்வெனும் தீபம் ஏற்றுமின்னிருள் கெட.

என்ற பாட்டு இதனையே கூறுகின்றது. பழைமையின் அனுபவத்தில் நாம் படிக்க வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. அந்த வகையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் கடந்தகால மேன்மை, அதன் உயர்கல்விப் பணி, அதில் கற்றுயர்ந்து நிற்போரின் மேதைமை என்பன எமக்கு புதுவழிகாட்டுகின்றன. புதிய சிந்தனைக்கும் முன்னேற்றத் திற்கும் தளமாகவும் அமைகின்றன. அதனால் தான் இன்று எமது விக்னேஸ்வரா கல்லூரி யில் கற்று தமிழர் அரசியலுக்கு தலைமை தாங்கி எமக்கு முன்னு தாரணமாகத் திகழ்ந்த திரு. மு. சிவசிதம்பரம் அவர்களை நினைவு கூருகின்றோம்.

அத்துடன், திரு. சிவசிதம்பரம் போன்ற தலைவர்களை எண்ணும் போது திருவாளர்கள் பி. கந்தையா, கே. ஜயக்கொடி ஆகியோரையும் நினைவுகூராமல் இருக்க முடியாது.

கரவையூற்று, கரவைவழிவந்த ஒரு தமிழ் அறுவடை, சிவலயம், யானறிந்த பேராசான் என்ற நூல்களை ஏற்கனவே வெளியிட்ட எமது சங்கம் "விக்னேஸ்வரா - மீள்நினைவுகள்" என்ற நூலை இப்பொழுது வெளியிடுகின்றது.

எமது சங்கத்தின் 20 - ஆவது ஆண்டு நிறைவையும் அதன் ஸ்தாபக காப்பாளர் மு. சிவசிதம்பரம் நினைவு கூரலையும் நிகழ்த்தும் இந்த வேளையில் கல்லூரியின் 75-ஆவது பவளவிழா மலரில் வெளிவந்த எமது கல்லூரி பழைய மாணவர் சிலரின் கல்லூரி கால நினைவுகளையும் தாங்கி இந்நூல் வெளிவந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்நூலும் ஏற்கனவே வெளிவந்த நூல்களும் எமது மாணவர்களின் பெருமையையும், அதில் பெற்ற புகழையும் உலகுக்கெடுத்தோதுகின்றது.

அந்த வகையில் இவ்வெளியீடு எமது கல்லூரியின் முக்கிய வரலாற்று ஆவணமாக அமைகின்றது. தமிழர் கல்வி விடயத்தில் எமது கல்லூரியின் வகிபாகத்தையும் அடையாளப்படுத்திக் காட்டுகின்றன.

இனி நூலினைப் படித்துப் பாருங்கள்.

**வீ.ஏ. திருஞானசுந்தரம்**
செயலாளர்
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை.

# கிளைச்சங்கத்தின் 20 ஆண்டு காலச்செயற்பாடுகள்

**வே. விமலராஜா, கிளைச் சங்கத் தலைவர்**

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை 1950ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, மிகவும் சிறப்பாக செயற்பட்டு வந்தது. பொதுக் கூட்டங்கள் கொழும்பில் நடைபெற்றன. பெரும்புள்ளிகள் பிரதம அதிதிகளாக அழைக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவர் பிரதமர் அமரர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்கள். இவர் பொதுக் கூட்டம் நடைபெற்றதைக் கவனித்துப் பாராட்டினார். இவர் பழைய மாணவர் களின் பெயர்களைக் அறிந்து ஆச்சரியமடைந்தார். இக்கூட்டத்தில் நன்றியுரை வழங்கிய எங்கள் கல்லூரியின் பழைய மாணவரும் காப்பாளருமான அமரர் திரு.மு. சிவசிதம்பரத்தின் பேச்சுத்திறனைப் புகழ்ந்து பாராட்டினார். மிகச் சிறப்பாகச் செயற்பட்ட எங்கள் கொழும்புக் கிளை 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் செயலிழந்துபோக நேர்ந்தது.

இச்சங்கம் மீண்டும் 25.07.1992 இல் கொழும்பில் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது. அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள். இக்கூட்டத்தை ஒழுங்கு செய்தவர் எங்கள் கல்லூரியின் பழையமாண வரும் அதிபருமான அமரர் திரு. க. சிவபாதசுந்தரம். இக்கூட்டத்தில் திரு. மு. சிவசிதம்பரமும் பிரபல தொழிலதிபரான திரு. க. கனகசபையும் பேராசிரியர் சிவத்தம்பியும் காப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். திரு. மு. சிவசிதம்பரமும் பேராசிரியர் சிவத்தம்பியும் இறக்கும் வரை

காப்பாளர்களாக இருந்தனர். நான் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டேன். காலஞ்சென்ற திரு. எஸ். பரமேஸ்வரன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

எங்கள் கல்லூரிக்கு பல வகைகளிலும் பழைய மாணவர்கள் உதவி புரிந்துள்ளனர். பிரபல தொழிலதிபர் க. கனகசபை அவர்கள் கல்லூரிக்கு காணிபெற்றுக் கொடுத்தார். மைதான விரிவாக்கத்திற்கும் கல்லூரியின் பவளவிழா மலருக்கும் பண உதவி வழங்கினார். புலமைப்பரிசில் நிதிக்கும் பணம் கொடுத்தார். பழைய மாணவரான அமரர் திரு. வி. பாலசுப்பிரமணியம், (பிரபல தொழிலதிபர்) கல்லூரிக்கு நீர்விநியோக வசதிகளைச் செய்து கொடுத்தார். புலமைப்பரிசிலை ஆரம்பித்தவர் பழைய மாணவரும் உபதலைவருமான திரு. என். பாஸ்கரன். காலஞ்சென்ற எனது ஏகபுத்திரியின் பெயரால் நானும் புலமைப் பரிசிலுக்கு நிதி வழங்கினேன். உபதலைவரான திரு. பீ. பாலச்சந்திரனும் தற்போது காப்பாளர்களாக உள்ளவர்களுள் ஒருவருமான கட்டட நிபுணரான திரு. என். வாகீசனும் புலமைப்பரிசிலுக்கு நிதி உதவி செய்துள்ளார்.

1992 தொடக்கம் 2002 வரையான பத்துவருடங்களில் எங்கள் சங்கம் செய்த சில சேவைகளைக் குறிப்பிடுகிறேன். பவள விழா மலருக்கு பலவகைகளிலும் உதவினோம். விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு உதவினோம். கல்லூரியின் வடக்குப்புற மதில் கட்டுவதற்கு ரூபா 74000 வழங்கினோம். இப்பணத்தை நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் ரூபா 10,000 வீதம் சேர்த்திருந்தோம்.

எங்கள் காப்பாளரான பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கு தமிழ்நாடு அரசினால் 2000 ஆண்டிற்கான திரு.வி.க. விருது வழங்கப்பட்டபோது இவரைக் கௌரவித்து வரவேற்பு விழா ஒன்று கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் 03.02.2001இல் நடத்தினோம். இவ்விழாவில் கனதியான 'கரவை ஊற்று' என்ற தொகுப்பு நூலை வெளியிட்டோம்.

எங்கள் கல்லூரியின் பழைய மாணவரான அமரர் கலாநிதி ஏ. சின்னத்தம்பி எழுதிய ஒழுக்கக்கல்வி (Moral Education) என்ற ஆங்கில நூலை 31.10.2001 பொதுக் கூட்டத்தில் வெளியிட்டுவைத்தோம்.

எங்கள் கல்லூரிக்கு பல உதவிகளை தொடர்ச்சியாகச் செய்த எங்கள் காப்பாளரான திரு. மு. சிவசிதம்பரம் உடல் நலம் இன்றி சென்னையில் சில காலம் இருந்து இலங்கை திரும்பியபோது அவருக்கு ஒரு வரவேற்பு விழாவை 16.02.2002 இல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தினோம். இந்த விழாவை எடுத்து நான்கு மாதங்களுக்குள் இவர் 05.06.2002 இல் காலமானார். இவருக்கு, நினைவு அஞ்சலிக் கூட்டம் நடாத்தி "சாகாவரம் பெற்ற சான்றோன்" என்ற நினைவு மலரையும் வெளியிட்டோம்.

எங்கள் கிளையின் பத்தாம் ஆண்டு ஜூலை 2002 இல் நிறைவடைந்தது. இதையொட்டி எங்கள் கிளை 10.08.2002இல் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் ஒரு விழாவை நடாத்தி 'இராமாயணம்' என்ற நாட்டிய நாடகத்தை மேடையேற்றியது. எங்கள் கிளையின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவராகவிருந்த திரு. சி. சிற்றம்பலநாதனின் மனைவியான உஷா, நாடகத்திற்கு நெறியாள்கை யாளர். இந்த நாடகத்தில் பங்குபற்றியவர்கள் எங்கள் பழைய மாணவர்களின் பிள்ளைகளே. இந்நாடகம் மிகவும் சிறப்பாக மேடையேற்றப்பட்டது. பலர் இதைப் பாராட்டினார்கள். இந்நாடகத் திற்கு அனுசரணை (sponsorship) வழங்கியவர், அப்பொழுது எங்கள் கிளையின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவராக இருந்த பிரபல கட்டிட நிபுணர் திரு. வாகீசன் ஆவார். மேலும் 'பத்தாண்டு காலப்பதிவுகள்' என்ற நினைவுமலைரையும் வெளியிட்டோம்.

இனி 2002 ஆம் ஆண்டு யூலை தொடக்கம் 2012 யூலை வரையான பத்தாண்டுகைளக் கவனிப்போம்.

கல்லூரிஅதிபரின் வேண்டுகோளை ஏற்று கல்லூரிக்கு ஒலி பெருக்கித் தொகுதி வகுப்பறைகட்கான ஒலிபெருக்கி இணைப்பினை (public address system) நவம்பர் 2004 இல் ஏற்பாடு செய்தோம்.

கல்லூரியின் நூலகத்தைக் கட்டுவதற்கு மதிப்பிற்குரிய பழைய மாணவரும் எங்கள் கிளை அங்குரார்ப்பணம் செய்த நாளிலிருந்து 05.07.1992 இறக்கும்வரை (05.06.2002) காப்பாளராக இருந்தவருமான அமரர் திரு. மு. சிவசிதம்பரம் வழங்கிய 7 1/2 இலட்சம் ரூபாவைக் கல்லூரிக்குக் கொடுத்தோம்.

பாராளுமன்ற உறுப்பினரான திரு.ஏ. விநாயகமூர்த்தி அவர்கள் மூலமாகவும் நெக்கோட் (NECORD) நிறுவன பணிப்பாளரான திரு. லங்காநேசன் அவர்கள் மூலமாகவும் கல்லூரியின் வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல், நூலகக் கட்டடம் பூரணப்படுத்தல் போன்ற வேலைகளை நிறைவு பெறுவதற்குச் சங்கத் தலைவர் பங்களிப்புச் செய்தார்.

எமது சங்க உறுப்பினர்கள் சிலர் கல்லூரிக்கு நேரடியாகவும் பல உதவிகளைச் செய்துள்ளனர். அந்த விபரங்கள் எங்களிடமில்லை. சங்கத்தின் காப்பாளரான தொழில் அதிபர் திரு. க. கனகசபை அவர்கள் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கரவெட்டிக்கு சென்றபோது கல்லூரிக்குப் போய் தனது தந்தை பெயரில் ரூபா 50,000/= வைப்பில் இட்டு ஒரு புலமைப் பரிசில் நிதியத்தை ஆரம்பித்துவைத்தார்.

கல்லூரியின் பழைய மாணவரான காலஞ்சென்ற திரு.வீ.ஏ. சிவஞானம் (எங்கள் செயலாளரின் தமயன்) அவர்கள் பற்றிய "சிவலயம்" என்ற நூல் சங்கத்தின் அனுசரணையுடன் 28.02.2005 ல் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்த வெளியீட்டு விழாவிற்கு சங்கம் செலவு செய்யவில்லை. இந்த விழாவில் லொத்தர் சபை பிரசாரத்திற்காக Banner ஒன்றைத் தொங்கவிட்டு ரூபா 5000/= கொடுத்தது. இந்தப் பணத்தை செயலாளர் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் கலந்து கொள்ள கொழும்பிற்கு வருகைதந்த எங்கள் கல்லூரி மாணவர்களை கொழும்புக்கிளை வரவேற்றது. தலைவரும், உபதலைவர், செயலாளர், தனாதிகாரி ஆகியோரும் இவர்களுக்கு பரிசில்கள் வழங்கினர். இம்மாணவர்கள் முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

'ஏ' பிரிவில் 2009 இல் தமிழ் மொழித்தினப் போட்டியில் முதலிடங்களைப் பெற்ற ஐந்து மாணவர்களை சங்க பிரதிநிதிகள் வரவேற்று அவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்தனர்.

ஜூலை 2001 இல் கொழும்பு இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் அறிவு வினாவிடைப் போட்டியில் கல்லூரி மாணவர்கள் ஐவர் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றனர். அவர்களை எங்கள் சங்கம் வரவேற்றுப் பாராட்டி விருந்துபசாரம் அளித்தது.

கல்லூரி அதிபர் எங்கள் சங்கத்துடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுள்ளார். எங்கள் சங்கம் லண்டன் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் பண உதவியோடு சரஸ்வதிவில்லாவிற்கு பின்புறமாக உள்ள 11 பரப்புக்காணியை பெற்றுக் கொடுத்தது. இந்த இடத்தில் இன்று பாடசாலை செயற்படுகிறது. 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அதிபரின் அழைப்பினால் சங்கத் தலைவர் கல்லூரியின் மெய்வல்லுனர் போட்டிக்கு பிரதம அதிதியாக சென்றார். அப்போது அதிபர் இந்தக் காணியை வாங்கித் தரும்படி கேட்டார். அதற்கிணங்க அதிபர் அயராது முயன்று உறுதியைத் தேடி எடுத்து லண்டனில் இருக்கும் காணி உரிமையாளரோடு தொடர்பு கொண்டு காணியை வாங்கி கல்லூரிக்குக் கொடுத்தார்.

எங்கள் சங்கம் நான்கு இலட்சம் ரூபாவை கட்டைவேலி கிராமிய வங்கியில் வைப்பிலிட்டு இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியை கல்லூரியின் குறிப்பிட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தும்படி ஏற்பாடு செய்துள்ளோம். எங்கள் சங்கம் நான்கு மாணவர்களுக்கு பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர்வதற்கு பணவசதி செய்துள்ளது. இந்த பணவசதியை எங்கள் காப்பாளரான திரு. என். வாகீசன் தந்துதவினார்.

உலகத் தமிழ்ப் பேரறிஞர்களின் பாராட்டுகளைப் பெற்ற புகழ்பூத்த எங்கள் கிளையின் காப்பாளரான பேராசிரியர் சிவத்தம்பியின் 79 ஆவது பிறந்த தினப் பரிசாக எங்கள் சங்கம் '**கரவை விக்னேஸ்வரா வழிவந்த ஒரு தமிழ் அறுவடை**' என்ற நூலை 18.06.2011இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டது. இந்த நூல் அவரின் அளப்பரிய ஆக்கங்களை யும் அவரைப் பற்றியவற்றையும் உள்ளடக்கிய அருமையான நூலாகும். இவர் அடிக்கடி கூறுவது என்னவென்றால் எப்படியாவது கரவெட்டி யைப் பற்றி ஓர் ஆய்வுநூல் எழுதவேண்டும் என்பதுதான். இவர் இந்த நூலில் கரவெட்டியின் வரலாற்றுக் குறிப்புகள் என்ற தலைப்பில் ஒரு

கட்டுரை மிகத் திறமையாக எழுதித் தனது நீண்ட கால ஆசையை நிறைவேற்றினார். இந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்ற மூன்றுகிழமைக்குள் அதாவது 06.07.2011இல் அவர் காலமானார். இந்த வெளியீட்டு விழாவே எங்கள் சங்கம் அவருக்கு அளித்த பிரியாவிடை யாகவும் ஆகிவிட்டது.

இவரது முதலாவது இறந்த தினம் 06.07.2012 ஆகும். இதற்காக 8.7.2012இல் எங்கள் சங்கம் ஒரு நினைவுப் பேருரையை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஒழுங்கு செய்து பேருரையை நிகழ்த்துவதற்கு தமிழ்நாட்டுப் பேராசிரியர் அ.மார்க்ஸ் என்பவரை அழைத்தது. மேலும் 21.07.2012ல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எங்கள் காப்பாளரான திரு.மு.சிவசிதம்பரத்தின் பிறந்த நாளையும் இறந்த பத்தாமாண்டினை யும் சங்கத்தின் இருபது ஆண்டு நிறைவையும் ஒருங்கே நடத்த ஒழுங்குகள் செய்தோம். சிவசிதம்பரம் நினைவுப் பேருரையை நிகழ்த்த நீதி அமைச்சர் கௌரவ திரு. றவூப் ஹக்கீம் அவர்களை அழைத்துள்ளது. பேராசிரியர் சிவத்தம்பி, திரு. சிவசிதம்பரம் ஆகியோரின் நினைவு மலர்களை வெளியிட ஏற்பாடு செய்தோம்.

முடிவில், சங்கத்தின் பணிகளை அர்ப்பண சிந்தையுடனும் தனித்துவமாகவும் ஆற்றிவரும் எமது செயலாளரான (முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) திரு. வீ.ஏ. திருஞானசுந்தரம் அவர்களுக்கு எமது விசேட பாராட்டையும் நன்றியையும் இங்கு பதிவு செய்ய வேண்டியது எனது கடமையாகும்.

I CONCLUDE SAYING THAT I HAVE GIVEN SOMETHING OF EVERY THING AND EVERY THING OF SOMETHING BUT NOT EVERY THING OF EVERY THING.

***

# எம் நெஞ்சங்களில் இறுகப் பதிந்த சிவா

**வே. விமலராஜா, கிளைச் சங்கத் தலைவர்**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்த முருகேசு சிவசிதம்பரம் அவர்கள் மறைந்து 5.6.2012 சரியாக 10 வருடங்கள் கடந்துவிட்டன. வடமராட்சியின் கரவெட்டியைக் சேர்ந்த இருவர் இலங்கை அரசியலில் தங்களுக்கென தனியான முத்திரையை வரலாற்றில் பதித்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் இன்று எம்மத்தியில் இல்லை. ஒருவர் பொன் கந்தையா. இவர் வட இலங்கையின் வரலாற்றில் முதற் தடவையாக பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவராவர். பருத்தித்துறைத் தொகுதியையே அவர் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தார். அவருக்குப் பிறகு பழைய பாராளுமன்ற தேர்தல் முறையின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எவருமே வட பகுதியிலிருந்து மாத்திரமல்ல, எந்தவொரு தமிழ்ப் பகுதியிலிருந்தும் பாராளுமன்றத் திற்குத் தெரிவானதில்லை.

அடுத்தவர் சிவசிதம்பரம். கந்தையாவுடன் ஆரம்ப காலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பங்கேற்ற போதிலும் பின்னர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்த சிவசிதம்பரம் 1960 களின் ஆரம்பத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட உடுப்பிட்டித் தொகுதியி லிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 1960 களின் நடுப் பகுதியில் பாராளுமன்றத்தில் உப சபாநாயகராகவும் சிவசிதம்பரம் பதவி வகித்தார். பாடசாலைக் காலத்திலிருந்து சிவசிதம்பரம் சிறந்த ஒரு பேச்சாளராக பெயரெடுத்தவர். அவருடைய மேடைப் பேச்சுக்

களையும் சரி பாராளுமன்ற உரைகளையும் சரி கேட்பதற்கு வாய்ப்புக் கிடைத்தவர்கள் பாக்கியசாலிகள் என்று கூறினாலும் மிகையில்லை.

1970 களில் தமிழரசுக் கட்சியின் தலைவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி தமிழர் அரசியலில் பாரிய மாறுதல்களுக்குக் காரண கர்த்தாவாக விளங்கிய சிவசிதம்பரம் தனது இறுதிக் காலத்தில் அதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகப் பதவி வகித்தார். 1983 கறுப்பு ஜூலைக்குப் பிறகு இலங்கையில் பாதுகாப்பில்லாத சூழ்நிலைகளின் கீழ் தமிழர் விடுதலை கூட்டணியின் ஏனைய தலைவர்களுடன் சென்னைக்குப் புலம்பெயர்ந்த சிவசிதம்பரம் அங்கிருந்து இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு உலக அரங்கில் ஆதரவைத் திரட்டுவதில் பாரிய பங்களிப்பைச் செய்திருந்தார். அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியுடன் இலங்கை இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் தொடர்பில் ஆராய்ந்த தலைவர்கள் மூவர். அவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் ஆகியோர். முன்னைய இருவரும் இன்று இல்லை. சும்பந்தன் மாத்திரமே எங்களுடன் இருக்கிறார்.

நோய்வாயுற்ற நிலையிலும் கூட சிவசிதம்பரம் அவர்கள் தனது இறுதிக் காலத்தில் இலங்கை திரும்பி தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்வதில் ஆர்வம் காட்டினார். சக்கர நாற்காலியில் நடமாடிய தனது உடல் நிலை குறித்து ஊடகங்களிலும் அரசியல் வட்டாரங்களிலும் பேசப்படுவதை ஒரு சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டிய சிவசிதம்பரம் அவர்கள் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பிராங்ளின் ரூஸ்வோல்ட் மிக இளவயதில் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டிருந்தவர். ஆனால் அவர் ஹிட்லரின் நாஜி ஜேர்மனிக்கு எதிரான நேச நாடுகள் கூட்டணியில் பிரிட்டனுடனும் சோவியத் யூனியனுடனும் சேர்ந்து பாசிசத்தைத் தோற்கடிப்பதற்கு பெரும் பங்களிப்புச் செய்திருந்தார். ரூஸ்வோல்ட் சக்கர நாற்காலியிலேயே நடமாடினார் என்று சிவசிதம்பரம் குறிப்பிட்டார். தான் காலினால் அல்ல தலையினாலேயே சிந்திப்பவன்

என்றும் கூட தனக்களிக்கப்பட்ட வரவேற்பொன்றின்போது குறிப்பிட்டது எனக்கு இன்னும் நல்ல ஞாபகமாக இருக்கிறது.

சிவசிதம்பரம் அவர்கள் என்னுடைய நெருங்கிய உறவினர். அவரை நான் சிவா அண்ணா என்று தான் அழைப்பேன். இங்கு சிவசிதம்பரம் அவர்கள் என்று நவநாகரிகத்திற்காக எழுதும்போது ஒரு அந்நியனாக எழுதுவதைப் போன்ற ஓர் உணர்வு என்னுள் உருவாகிறது. சிவசிதம்பரம் அவர்கள் கரவெட்டியில் ராசவாசல் முதலியார் குடும்பத்தில் பிறந்தவர். முதலியார் சிற்றம்பலத்தின் மகனான முருகேசு உடையாரின் மகன்தான் சிவசிதம்பரம். இவரது தாய்வழிப்பேரன் ராசவாசல் கந்தப்பு சின்னத்தம்பி சிவசிதம்பரம் பிறப்பில் ஒரு துரதிஷ்டசாலி. அவர் பிறந்த சில நாட்களிலேயே தாயார் இறந்துவிட்டார். அவரது குடும்பத்தினரால் தாபிக்கப்பட்ட கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கேம்பிரிட்ஜ் சீனியர் வரை கல்வி கற்று பின்னர் இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரியில் சிவசிதம்பரம் பிரவேசித்தார். பின்னர் கொழும்பு சட்டக்கல்லூரியில் இணைந்து 1947 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக வெளியேறினார். இவர் மிகவும் புகழ்பெற்ற ஒரு குற்றவியல் வழக்கறிஞராக மிளிர்ந்தார்.

சிவசிதம்பரம் விக்னேஸ்வராக் கல்லூாயில் மாணவராக இருந்தபோது கல்லூரியின் பாராளுமன்றத்தில் சபாநாயகராகவும் பிரதமராகவும் தெரிவு செய்யப்பட்டார். கல்லூரிப் பாராளுமன்ற அனுபவமே இவர் இலங்கை பாராளுமன்றத்தில் உப சபாநாயகராக இருந்தபோது சிறப்பாக செயற்படுவதற்கான முன்கூட்டிய அனுபவங் களைக் கொடுத்தது. இவரின் செயற்பாடுகளை கலாநிதி என்.எம். பெரேரா பெரிதும் பாராட்டினார். பாராளுமன்ளறத்தில் இவரை உடுப் பிட்டிச் சிங்கம் என்று அழைத்தனர். சிம்மக் குரலோன் சிவசிதம்பம் என இவரை நாமெல்லோரும் அழைப்பதுண்டு.

சிவசிதம்பரம் அவர்களின் பிறந்ததினம் ஜுலை 20ஆந் திகதியாகும். சரியாக 20வருடங்களுக்கு முன்னர் அவரது பிறந்த தினத்தன்றே (20.07.1992) எமது கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையை நாம் தாபித்தோம். அவரையும் காலஞ்சென்ற பேராசிரியர் கார்த்தி கேசு சிவத்தம்பியையும் சங்கத்தின் போசகராக தெரிவுசெய்தோம்.

இது தொடர்பான வைபவம் கொழும்பு பம்பலப்பிட்டி தொடர்மாடி குடியிருப்புப் பகுதியில் அமைந்திருக்கும் சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோது சிவசிதம்பரம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

எமது கிளைச் சங்கத்தின் பத்தாண்டு நிறைவு விழாவை 2002ஆம் ஆண்டில் சிவசிதம்பரத்தின் நினைவஞ்சலி நிகழ்ச்சியாக மாற்ற வேண்டிய துரதிஷ்டம் எமக்கேற்பட்டது. கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த வைபவத்தில் 'சாகாவரம் பெற்ற சான்றோன்' என்ற மலரை அவரின் நினைவுக்குக் காணிக்கையாக்கினோம்.

2002ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நோர்வேயின் அனுசரணை யுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலி களுக்கும் இடையே கைச்சாத்தான போர் நிறுத்த உடன்படிக் கையைத் தொடர்ந்து சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்தில் சிவசிதம்பரம் அவர்கள் தனது உடல் நிலையையையும் பொருட் படுத்தாமல் கொழும்பு திரும்பினார். முக்கியமான அந்தக் காலகட்டத்தில் தென்னிந்தியாவில் இருப்பதைவிட தனது தமிழ் மக்களுடன் இருப்பதையே அவர் விரும்பினார். சமாதான முயற்சி களுக்கு அனுசரணையாக உள்நாட்டு அரசியல் செயன்முறைகளில் பெரும் பங்களிப்பைச் செய்யக்கூடிய ஆற்றலும் அனுபவமும் கொண்ட முதுபெரும் தலைவர் சிவசிதம்பரம் கொழும்பு திரும்பிய சில மாதங்களில் எம்மைவிட்டுப் பிரிந்தது மிகவும் துரதிஷ்ட வசமானதாகும். இவரது மறைவை ஒரு மலையின் சரிவுடன் ஒப்பிட முடியும். அது என்றுமே ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

சிவசிதம்பரம் இறப்பதற்கு முதலில் பங்குகொண்ட பொது வைபவம் கரவை விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினால் 16-02-2002 இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு விழாவாகும். அதில் பேராசிரியர் சிவத்தம்பியும் கலந்து கொண்டார். நாம் பெரிதும் நேசிக்கும் சிவா அண்ணா இறுதியாகக் கலந்து கொண்டது எமது ஏற்பாட்டிலான வைபவத்திலேயே என்பதை நினைக்கும்பொழுது ஒருவகையில் மன ஆறுதல் அடையக்கூடியதாக இருக்கிறது. தனது

வாழ்நாளில் தான் ஏதாவது உச்சத்தை அடைந்திருந்தால் அதற்குக் காரணம் விக்னேஸ்வராக் கல்லூரியில் தன்னால் பெறக்கூடியதாக இருந்த கல்வியும் ஒழுக்கமுமே என்று உலகின் எந்த மூலையிலும் சொல்வதற்கு சிவா அண்ணா தயங்கியதில்லை.

சிவசிதம்பரம் அவர்கள் தமிழ் இனத்தின் விமோசனத்தில் அக்கறை கொண்டவராக இருந்த போதிலும் தனது சொந்த ஊரான கரவெட்டியை எப்பொழுதுமே நேசித்தவர். சென்னையில் இருந்த பொழுது ஊரவர்கள் அங்கு சென்றால் ஊர் நிலைமைகள் பற்றி ஆற அமர இருந்து அக்கறையுடன் கேட்டறிவார். அத்தகைய அனுபவம் எனக்கு எண்ணற்ற தடவைகள் ஏற்பட்டது. தனது இறுதிச் சடங்குகள்கூட சொந்த ஊரிலேயே நடைபெறவேண்டுமென்று அவர் விரும்பினார். அவரது விருப்பத்திற்கு இணங்க இறுதிச் சடங்கு கரவெட்டியிலுள்ள சோனப்பில் அவரது குடும்ப மயானத்திலேயே இடம்பெற்றது. இன்று சிவா அண்ணா மறைந்து பத்தாண்டுகள் கடந்துவிட்டன. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் நாமோ தமிழினமோ அவரை ஒரு போதும் மறக்க முடியாது. எங்கள் நெஞ்சில் அவர் இறுகப் பதிந்துள்ளார். சிவா அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை சார்பாக பிரார்த்தித்து நிற்கிறோம்.

***

## மனித நேயன் - சிவசிதம்பரம் மறைந்த வேதனையில்.....

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

தமிழ் பேசும் மக்கள் என்றில்லை, இலங்கை வாழ் சகல மக்களினதும் மரியாதைக்குரிய முதுபெரும் தலைவர் ஒருவரின் மறைவே மு.சிவசிதம்பரத்தின் மறைவாகும்.

1950 முதல் இலங்கையின் தமிழ் பிரச்சினையை அறிவும், அனுபவமும் அரசியல் தீட்சண்யமும் கொண்ட பார்வையுடன் கையாண்டு வந்த ஒரு முதுபெரும் தலைவரை எம்மிடத்திலிருந்து காலன் அகற்றியுள்ளான்.

தனது மாணவ காலத்திலிருந்து அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்த சிவசிதம்பரம் பின்னர் அரசியலில் பிரவேசித்தது இடதுசாரிக் கொள்கைகளின்பால் கொண்டிருந்த ஈர்ப்பினாலேயே. அகில இலங்கை தமிழக் காங்கிரஸின் ஒரு முக்கிய உறுப்பினராக விளங்கிய இவர் அக்கட்சியின் பிரதிநிதியாக வடமராட்சியில் போட்டியிட்டார். ஆனால் வளர்ந்து வந்த தமிழர் பிரச்சினை தமிழர்களுடைய ஒருமைப்பாட்டை நிர்ப்பந்தித்ததன் காரணமாக இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு முக்கிய உறுப்பினராக இணைந்து கொண்டார். அக்காலத்தில் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் பிரதிநிதித்துவம் செய்து கொண்டிருந்த இருபெரும் தலைவர்களாக சிவசிதம்பரமும், அமிர்தலிங்கமும் விளங்கினர். தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் இருந்து கிளம்பிய இரு முக்கிய தலைவர்களாக மக்கள் இவர்களைக் கண்டனர்.

அந்தக் காலகட்டத்தில்தான் இனப் பிரச்சினை தீவிரமயப்படுத்தப் பட்டது. இளைஞர் தீவிரவாத இயக்கங்களும் அப்போதுதான் தோன்றின.

அரசியல் மாற்றங்களின் விளைவுகளால் பின்னர் வடமராட்சி மக்கள் அவரை நிராகரித்தபோதும் அதே வடபகுதி மக்களின் ஏகோபித்த அரசியல் நல்லிணக்கத்தின் வெளிப்பாடாக அவர் 2001இல் பாராளுமன்றம் புகுந்தார்.

சிவசிம்பரத்தை நீண்டகாலமாக அறிந்தவன் என்ற வகையில் நான் இரண்டு விடயங்களை முதன்மைப்படுத்த விரும்புகிறேன். அவர் பதவியையும் தனது நலன்கள், பிரபல்யம், தனது ஆளுமை என்பவற்றையும் முன்னிலைப்படுத்தாதவர். இதனுடைய இந்த இயல்பு காரணமாக தர்க்க ரீதியாக அவரைச் சென்றடைந்திருக்க வேண்டிய பல தலைமைத்துவங்களை அவர் பெற்றுக் கொள்ளவில்லை. இரண்டாவது, ஆளுமை நிலைப்பட்ட அவரது நேர்மை. அரசியல் காரணமாக தனது பாரிய சொத்து முழுவதையும் ஏழத்தாழ இழந்தவர். அரசியலுக்கு வருகின்றவர்கள் சீமான்களாக மாறுவதுதான் வரலாறாகவும், பொது நெறியாகவும் இருக்கின்ற சூழலில் தன்னுடைய பாரிய பாரம்பரிய சொத்தை படிப்படியாக இழந்தவரே சிவசிதம்பரம்.

அடிப்படையில் பிறருக்காக வாழ்கின்ற மனிதனாகவே தன்னை அவர் இனம் காட்டினார். எளிமை என்ற பண்பு அவரிடத்தில் நிறைந்து காணப்பட்டது. அவருடைய இன்னொரு சிறப்பியல்புதான் கேட்ப வரிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் விடயங்களை எளிமையாக எடுத்துக்கூறும் பாங்காகும். அவரது இந்தப் பேச்சுத் திறமைதான் அவரைத் தலை சிறந்த வழக்கறிஞராக இனம் காட்டியது.

எவரையும் புண்படுத்துகிற தன்மை அவரிடம் காணப்படவில்லை. அரசியல் பகைவனைக்கூட தன்னுடைய சொற்களால் புண்படுத்தி விடக்கூடாது என்கின்ற பண்பு அவரிடத்தில் இருந்தது.

அரசியல் தொடர்பான கருத்து வேறுபாடுகள் எனக்கும் அவருக்கும் இடையே இருந்தபோதும் தனிப்பட்ட வகையில் நாம்

இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கின்ற அளவுக்கு நண்பர்களாக வாழ்ந்தோம்.அவருடைய மறைவு யாழ்ப்பாணத்து சமூகத்துக்கு ஏற்பட்ட இழப்பல்ல. அவர் இறுதி வரை இந்நாட்டின் மிகப்பெரிய, மிகச் சிறந்த இலங்கை நேசர்களில் ஒருவராக திகழ்ந்தார் என்பதை இலங்கை மக்களும் குறிப்பாக சிங்கள மக்களும் அறிந்திருக்கவில்லை. தாய் நாட்டின் உயர் கௌரவத்தில் பெரு நம்பிக்கை கொண்டிருந்த அவர் தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ முடியும் என்ற எதிர்பார்ப்பை கடைசி வரை கைவிடவில்லை.

(தொகுப்பு – க.ஜீவா - தினகரன் வார மஞ்சரி, யூன் 2002.)

***

# தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை

**மு. சிவசிதம்பரம், பழைய மாணவன்**

என்னை வளர்த்து உருவாக்கிய, விக்னேஸ்வராக் கல்லூரி 75ம் ஆண்டு நிறைவு விழா எடுப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைந்தேன். ஒரு தனி மனிதன் இப்படி விழா எடுக்கும்பொழுது, அவரது குடும்பமும் சிநேகிதர்களும் மட்டுமே மகிழ்வார்கள். ஆனால், விக்னேஸ்வராக் கல்லூரியின் விழாவில் நூற்றுக்கணக்கானோர் நன்றி மகிழ்வுடன் பங்கு பெறுவர். ஆங்கிலக் கல்வி புகட்டியதுமல்லாமல், அக்கல்வி ஏழை, பணம் படைத்தவர்கள், உயர்சாதி, குறைந்தசாதி என்ற வித்தியாசமில்லாமல் புகட்டப்பட்டது. இதைச் செய்வதற்கு உதவியாயிருந்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கு விசேடமாக கடல் கடந்து திருவனந்தபுரத்திலிருந்து வந்த பட்டதாரி ஆசிரிய பெருந்தகைகளுக்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்கள்.

இதுவே ஓர் சாதனையாயினும், இலங்கையில் வேறு எந்தக் கல்லூரிக்கும் இல்லாத பெருமை நமது கல்லூரிக்கு உண்டு. அதுதான் கல்லூரியின் அன்றாட நிர்வாகத்தை மாணவர்களோடு ஒரு நாடாளுமன்ற அமைப்பின் மூலம் பல ஆண்டுகளாக நடத்தியது. இம்முறை முதன் முதலாக அதிபர் இராமசாமி 1972இல் ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து வந்த அதிபர்கள் அம்முறையை மேலும் சீர்படுத்தி, மெருகூட்டி நடத்தி வந்தார்கள்.

ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஒப்ப பிரதிநிதிகளை அந்த மாணவ, மாணவிகள் தெரிவு செய்வார்கள். அப்படி எல்லா வகுப்புக்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்கள் சேர்ந்து நாடாளுமன்றத்தை அமைத்தார்கள். இவர்கள் ஓர் நல்ல நாளிற்கூடி, சபாநாயகர், பிரதம மந்திரி, மந்திரிகள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைத் தெரிவு செய்வார்கள். மந்திரிகளின் எண்ணிக்கை தேவைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும். நாடாளுமன்றத்திற்கு தேவைப்படும் பணத்தை, அதிபர் நிதி மந்திரியிடம் கொடுப்பார். வருட ஆரம்பத்தில் நிதி மந்திரி கொடுக்கப்பட்ட பணத்தை எவ்வகையில் செலவு செய்வது என்பதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண்டும். இதன்படிதான் பணத்தை செலவு செய்ய வேண்டும். பணம் வீணாக செலவு செய்யப்பட்டதாக அல்லது கையாடப்பட்டதாக எந்த நிதி மந்திரி மேலும் குறை கூறப்படவில்லை. பொறுப்பைக் கொடுத்தால் அதை சிறந்த முறையில் இளைஞர்கள் செயல்படுத்துவார்கள் என்பது தெளிவாகிறது. மாதம் இரு முறை நாடாளுமன்றம் கூடும். எல்லா மாணவ, மாணவிகளும் கூட்டத்திற்கு வரலாம். விவாதங்களில் பங்கு கொள்ளலாம், ஆனால் வாக்களிக்கும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும்தான் உண்டு.

சுகாதாரத்துக்குப் பொறுப்பாக ஒரு மந்திரி, வகுப்பறைகளும், முற்றமும், மிகச் சுத்தமாக வைத்திருப்பது இவர் பொறுப்பு. மாணவ, மாணவிகளும் கல்லூரி வேலையாட்களும் இவருக்கு உதவி புரிவார்கள். மாணவ, மாணவிகளின் ஒழுக்க நெறிக்கு ஒருமந்திரி, மாணவ மாணவிகள் நேரம் தவறாமல் வருவதும், தேவையில்லாமல் சத்தம் போடுவதும், தங்களுக்குள் வீண் சச்சரவு உருவாகாமல் தவிர்ப்பதும், இந்த மந்திரி பார்க்க வேண்டிய கடமைகள். மாணவ, மாணவிகள் குற்றம் புரிந்தால் அவர்களுக்கு புத்திமதி கூறும் உரித்து இவருக்கு உண்டு. ஆனால் கண்டிக்கும் உரித்து இவருக்கு இல்லை. அது அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் தான் உண்டு. இந்த மந்திரி செய்யும் கடமைகளை மறு கல்லூரிகளில் பிரிபெக்ட் (Prefect) அல்லது மொனிட்டர் (Monitor) செய்வார்கள். இவர்கள் அதிபரால் நியமிக்கப்பட்டவர்கள். எனவே இயற்கையாகவே மாணவ, மாணவிகள் மத்தியில் ஒரு எதிர்ப்பு மனநிலை உருவாகின்றது. மேலும் பிரிபெக்ட் அல்லது மொனிட்டர் பாராபட்சமாகவோ அல்லது நியாயமற்ற

முறையிலோ நடந்தால் அதிபர்தான் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் எங்கள் கல்லூரியில், தாங்கள் தெரிவு செய்தவர் கள்தான் மந்திரி. எனவே அவருக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று மாணவ, மாணவிகள் நினைப்பார்கள். மேலும் அவர் நியாயமில்லாமல் நடந்தால், நாடாளுமன்றத்தில் அவரைக் கேள்வி கேட்கவோ, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அகற்றும் உரிமை தமக்கு உண்டு என்று தெரிவதால், ஒழுக்கத்தைப் பேண முழு ஒத்துழைப்பும் நல்குவார்கள்.

விளையாட்டுத்துறைக்கு ஓர் மந்திரி. மாணவ மாணவிகள் வெவ்வேறு விளையாட்டுக்களில் பங்குபற்ற வசதி செய்தல், போட்டிகளில் பங்கு பற்றும் வீரர்கள், வீராங்கனைகளுக்கு பயிற்சிக் குழு ஒழுங்கு செய்தல், வேறு கல்லூரிகளிலிருந்து எங்கள் கல்லூரிக்கு வரும் கோஷ்டிகளை வரவேற்றல், உபசரித்தல் போன்றவை இவரின் கடமைகள்.

சமய நெறியைப் பேண இன்னும் ஒரு மந்திரி. கல்லூரி ஆரம்பிக்க முன் தேவாரம் ஓதுதல், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூஜைகளுக்கு ஒழுங்கு செய்தல், இந்துக்கள் அல்லாத மற்ற சமயங்களை சார்ந்தவர்களுக்கு அவர்கள் பிரார்த்தனை செய்ய ஒழுங்கு செய்தல், காலத்திற்குக் காலம் சமய சொற்பொழிவு செய்வதற்கு ஒழுங்கு செய்தல் இவரின் கடமையாகும்.

ஒரு கல்லூரியின் கல்வி புகட்டலுக்கு அப்பால் உள்ள நடவடிக்கைகளுக்கு மாணவ, மாணவிகளால் தெரிவு செய்யப்பட்ட மாணவ, மந்திரிகள் பொறுப்பாக இருந்தார்கள். இந்த முறை சிறப்பாக நடந்தபடியால்தான் பல ஆண்டுகளாக வெவ்வேறு அதிபர்களின் கீழ் இம்முறை தொடர்ந்தது. பொறுப்பான கடமைகளை கொடுத்தால் பொறுப்புணர்ச்சியுடனும், கண்ணியத்துடனும், கடமையுணர்வுடனும் இளைஞர்கள் செயல்படுவார்கள். இதற்கு விக்னேஸ்வராக் கல்லூரி நாடாளுமன்றமுறை ஓர் எடுத்துக்காட்டு.

நாடாளுமன்றக் கூட்டம் தொடங்கி, சில நிமிடங்களுக்கு மந்திரிகளைக் கேள்வி கேட்கலாம். மந்திரிகள் தக்க பதில் சொல்லாவிட்டால், பிரதம மந்திரியும், சபாநாயகரும் அவர்களைக்

கண்டித்து, அடுத்த கூட்டத்தில் பதில் கொடுக்க வற்புறுத்துவர். சபாநாயகர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவார். பிரதம மந்திரி எல்லா மந்திரிகளின் கடமை களையும் ஒருங்கிணைப்பதோடு, நாடாளுமன்றத்திற்கும் அதிபருக்கும் பாலமாக இருப்பார்.

கேள்வி நேரம் முடிந்தவுடன் பிரதம மந்திரி ஏதும் பிரேரணை இருப்பின் அதை முன்மொழிவார். அதில் விவாதம் நடந்து வாக்கெடுக்கப்படும். இதைப்போல தனிப்பட்ட அங்கத்தவர்களும் பிரேரணைகளைக் கொண்டு வரலாம். ஆனால், அவைகளுக்கு முன் அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

இவைகளுக்கு மேலாக உலக விவகாரங்கள், பொது விடயங்கள் இவைகளைப் பற்றி விவாதங்கள் நடக்கும். வெள்ளைக் கார அரசாங்கம், மகாத்மா காந்தியை சிறையிலடைத்தபொழுது அவரை உடனே விடுதலை செய்ய வேண்டுமென விவாதித்தோம். சீதனம் வாங்கும் பழக்கம் அறவே ஒழிக்கப்பட வேண்டும் என விவாதித்தோம். இப்படி பல முக்கியமான ருசிகரமாக விவாதங்கள் விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தில் நடந்துள்ளன.

எமது கல்லூரியின் சரித்திரத்தில், நாடாளுமன்றப் பயிற்சியால், என்றும் மறக்க முடியாத ஓர் நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட வேண்டும். 1930 ஆம் ஆண்டு ஆசியஜோதி பண்டித நேரு இலங்கைக்கு வந்தபோது நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறைக்குச் சென்றார். எமது கல்லூரி மாணவ, மாணவிகளும், பொது மக்களும் நெல்லியடிச் சந்தியில் பெரியார்க்கு ஓர் வரவேற்புக் கொடுத்தார்கள். கல்லூரி நாடாளுமன்றத்தின் சார்பில் அவரை வாழ்த்தி ஓர் மடல் வாசித்து கொடுக்கப்பட்டது. அதன் கடைசி வாக்கியம், “We will not Falter (நாங்கள் நிலை தவறோம்) வழக்கமான வசிகரப் புன்சிரிப்புடன் மடலைப் பெற்றுச் சென்றார். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் எத்தனையோ முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார்கள். ஆனால், தனது சுய சரித்திரத்தில் (Auto biography) இந்த நிகழ்ச்சியை விசேடமாக குறிப்பிட்டுள்ளார். கல்லூரியின் பெயர், வரவேற்பு நடந்த இடத்தின் பெயர் எல்லாம் மறந்து விட்டார். ஆனால் அந்த கடைசி

வாக்கியம் "We will not falter" அவர் நினைவில் நிலைத்து நின்றது. அவரின் சுய சரிதையில் இந்த நிகழ்ச்சியை வாசிக்கும்பொழுது எப்பொழுதும் என் நெஞ்சம் பெருமையால் நிறையும்.

விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தில் பயிற்சி பெற்ற மூவர் நாட்டின் நாடாளுமன்றம் சென்றோம். திரு.கந்தையாவும், திரு. ஜெயக்கொடியும், நானும், இலங்கை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு, திறமையாக நமது கடமைகளை ஆற்றினோம். கண்ணியமான உறுப்பினர்கள் என்று பெயரும், புகழும் பெற்றோம். இதற்கு முக்கிய காரணம் நாம் கல்லூரி நாடாளுமன்றத்தில் பெற்ற பயிற்சியே.

என்னுடைய காலத்தில், நாடாளுமன்றத்தின் மந்திரியாக, பிரதம மந்திரியாக, சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். ஏதோ கல்லூரி முகாமையாளரின் பேரன் என்பதால் தெரிவு செய்யப்பட வில்லை. ஏனெனில் மூன்று தருணங்களில் படுதோல்வியும் அடைந் திருக்கிறேன். இதனால் வெற்றிகளையும் தோல்விகளையும், சமனாக பாவிக்கும் மனோபாவம் கிடைத்தது. வாழ்க்கையில் இது மிக அவசியம்.

விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தின் பயிற்சியினால் எனக்குக் கிடைத்த வேறும் ஒரு நற்பண்பைக் குறிப்பிட விரும்புகிறேன். விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தின் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட பொழுது, திரு.கோவிந்தப்பிள்ளை ஓர் உபதேசம் தந்தார். "இந்தப் பதவியில் இருக்கும்பொழுது நடுநிலையைத் தவறாமல், எதிரியையும் நண்பர்களையும் சமனாகப் பாவித்து நேர்மையான தீர்வு வழங்க வேண்டும்." இலங்கையின் பிரதிச்சபாநாயகராக, சபாநாயகர் ஆசனத்தில் முதல் முதல் அமர்ந்தபொழுது, இந்த அறிவுரையை நினைவு கூர்ந்துகொண்டேன். நடைமுறையிலும் அப்படி நடந்து கொண்ட நிகழ்ச்சியை குறிப்பிட விரும்புகிறேன். 1967இல் திருமதி பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தார். அவருடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு அரசாங்கக் கட்சிப் பிரதிநிதி, தங்கள் கட்சியின் அமைச்சரிடம் திருமதி பண்டாரநாயக்காவின் ஓர் மோட்டார் வாகனம் வாங்கிய விடயமாகக் கேள்வி கேட்டார். விளக்கமில்லாத ஒரு பதில் திருமதி பண்டாரநாயக்

காவிற்கு சற்று பாதகமாக இருக்கும். கேள்வியும் பதிலும் என்ற முறையாகையால், திருமதி பண்டாரநாயக்கவுக்கு விளக்கம் கொடுக்க வசதியில்லை. இந்த விடயத்தை, கேள்வி பதில் மூலம் எழுப்ப முடியாது என்று நான் கூறி கேள்வி கேட்க இடம் கொடுக்கவில்லை. தேவை எனின் தனிப்பட்ட பிரேரணை கொண்டு வரலாம் என்று தீர்ப்புச் சொன்னேன். பிரேரணை கொண்டு வந்தால், திருமதி பண்டாரநாயக்க விளக்கம் கொடுக்கலாம். இது நியாயமான, நேர்மையான தீர்ப்பு என்று டாக்டர் என்.எம்.பெரேரா (Dr.N.M.Perera, M.P) போன்றவர்கள் பாராட்டினார்கள். "தொட்டில் பழக்கம் சுடுகாடுவரையும்" போல விக்னேஸ்வரா நாடாளுமன்ற பயிற்சி வாழ்க்கை முழுவதும் நின்று உதவி செய்தது.

வாழ்க எனது கல்வி அன்னை!

***

# The hey days at Vigneswara

**V. Thillainathan, Old Student**

Though forty years have lapsed since I left Vigneswara, the teachers who taught me and many of my colleagues who learnt with me, are still green in my memory. Since there was no Primary section at Vigneswara in the years before fifties, children from neighbouring villages had to have their primary education at Maniccavasagar Vidyalaya and elsewhere and entered Vigneswara in the sixth standard. I was no exception to this and joined Vigneswara in the year 1949. Messrs K.V. Kandiah, A. Chinniah and Minnoli 'Akka' were the first batch of teachers with whom we started.

I am fortunate, so to say, that I had my entire education at Vigneswara till I left in the middle part of the fifties seeking my career. It is appropriate here to bring to memory the phonetician, the late Mr. T.Balasubramaniam who was the most sought after personality in those days, by one and all in the Junior and Senior Secondary classes, who taught us English and Civics in such a manner as to make those subjects so interesting. His style of pronunciation and usage of vocabulary in the most appropriate contexts were so excellent that we were kept spellbound during his classes. Mr. Bala used to be the microphone steward too during our Interhouse Sports Meets and elsewhere at public functions of the Vadamaradchy Teachers Association. It was a pleasure to hear his multisonic voice which still reverberates in my ears.

Our principal at the time Mr. K. Sivapragasam, had just taken over from Mr. K.G. Padmanathapillai, the last of the Indian Principals, when I joined. The foundation laid By Mr. K. Sivapragasam, especially in English, still stands in good stead. Besides English, he taught Mathematics, Tamil, History and a host of other subjects that came into his realm by virtue of his versatility. I have seen him just walk into a class where the Subject master was absent and teach the subject of the period very effectively with a blend of humour and fun, thus usefully occupying the students. Talented teachers of this calibre have become a rare commodity nowadays and we Vigneswarans are proud to have learnt under these veterans.

Education at Vigneswara was not confined to class room only. It grew wide in the form of co-curricular activities which comprised of sports and games, dramatics and oratory and other literary activities. Special mention must be made of the school Parliament which constituted the foremost literary activity of the School. My interests were then fully tied up with the parliament dramatics and oratory. I remember winning awards in almost all these activities in school as well as in the competitions held by the V.T.A. My art of speech making grew from the lower forms where Messrs. S. Mahesan, S. Balasundaram, for English and Messrs. I Chittampalam and A. Kanagasabai for Tamil, put me in the right path for my achievements in the later years.

Some of the plays we staged won prizes at Health week celebrations of the Circuit and V.T.A. Annual Competitions. Special mention should b made of a play titled 'Swabasha' a term in Sanskrit – Synonymous to the term "Mother Tongue" the topic of which often came for debates in the Parliament of Ceylon and among the politicians in the early part of fifties. This play was based on the current controversial affair. It won the first prize at the V.T.A. Annual competition, held in 1955 – That was the time there was an agitation

in the country for the switch over from English to Sinhala and Tamil at the mediums of instruction in Schools.

The cry for "Sinhala only" as the official language and the passage of the official languages Bill in parliament in 1956, brought about by the then Prime Minister Hon. S.W.R.D. Bandaranayake are now matters of history and have now gone into oblivion. After four decades now the politicians and educationists at large have begun to realise the immense value of English as an International Language. English is now gaining its pride of place in schools and universities along with the mother tongues.

It is no exaggeration to say that way back in 1955, we the Vigneswarans highlighted the importance of the English Language through the medium of this play 'Swabasha' to everybody concerned. The hero of the play delivers a speech in English at a political rally putting across this point of view very effectively. I had the privilege of playing the lead role in it by virtue of my knack for theatrical performances.

Mr. A. Subramaniam popularly known as "Artist Master" in whose thought hatched this satrical theme wrote the script and directed the play. The speech in English was written by Mr. T. Balasubramaniam. Quoting from the very speeches of the then Prime Minister, the cynical terms he used such as microscopic minority, 'pseudo nationalist' etc. Mr. A.S. taught us Geography as well graphically in addition to his devoted attention to the multi – pronged activities of the college. There was no work in the school that went without his hand in it. He got himself involved in almost every activity of the school right up to the construction of buildings and furniture. It was he who taught us the Art of Stage – Decorate each and every celebration of the college. Though I have no penchant for Fine Arts and never excelled in them appreciably, I used to admire his work of Art as had been his close followers like P. Visakaperuml, K. Panchaligam, S. Anandarajah, K. Ganeshamoorthy and others. It

was heartwarming to know that one of his oil paintings, titled 'Girl hood' had been bestowed with High Commendations by the Ceylon Society of Arts followed by the Peoples Republic of China in the early sixties.

The College Parliament came into being from the latter part of the twenties, when the South Indian educationists came to man the destinies of the College. It was a unique formation, to an educational institution, for the type of which we never heard of in existence in any institution in this part of the country. Basically it provided a forum for the students to develop their personalities – by way of practicing the art of speech – making eliminating stage – fright and indulging in the exercise of discussions and debates on varied number of current interesting affairs. We Vigneswarans could be proud of this forum for it successfully existed for more than 25 years until the mid fifties when the system was abolished to make way for the Prefects system.

The college parliament practiced parliamentary democracy in all its aspects. The composition and functions it adopted were more like the Mother Parliament of Ceylon, but amended to suit the educational environments of the College.

The Patrons of the parliament who invariably were the Vice Principal or a Senior Master, guided the affairs. The membership comprised of students of the Junior and Senior Secondary classes. Elections were held annually and a Speaker or a Deputy Speaker elected, presided over the sittings. The governing party comprised of a Prime Minister, a whip and a Cabinet of Ministers. The Leader of the Opposition, the alternative Prime Minister, led the opposition group. The Prime Minister was also considered, the Leader of the students. The Ministers who held portfolios of Health, Sports, Religious activities, Finance and Horticulture were also responsible for the maintenance of discipline among the students.

It is no coincidence that parliamentarians of the calibre of Messrs. P. Kandiah, M.Sivasithamparam and K. Jeyakody who made their mark in the parliament of Ceylon, were also parliamentarians of our shadow parliament of Vigneswara, during their hey days. There were yet a few more personalities who held important portfolios in our College Parliament, dabbled in politics and vied unsuccessfully to enter the parliament of the country. They were late Messrs. K.C. Nadarajah, Pon. Kumarasamy and K.C. Mahadevan.

Mr. P. Kandiah was the first to enter the parliament of Ceylon, groomed in our college, representing Point Pedro. He was a highly respected parliamentarian of the time, especially in the socialist arenas. Mr. M. Sivasithamparam who had been the Prime Minister and speaker of our college parliament in succession, held the post of Deputy Speaker in the Sri Lankan Parliament while representing Uduppiddy and Nallur electorate. Mr. K. Jeyakody too was no exception and contributed in no smaller way than his predecessors, representing Uduppiddy. Mr. K.C. Nadarajaha noted Barrister was the manager of this college for a decade and had been the first prime minister of the College Parliment. Mr. Pon. Kumarasamy held the speaker post and K.C. Mahadevan had been speaker and Prime Minister for a successive period.

It may be an anti climax to state that I too was Prime Minister of the College Parliament. I remember serving first as a Junior Minister in the Cabinet of late V.P. Sundaralingam (District Judge). Subsequently I founded a party of my own 'Students Freedom Party' and at the next election swept to power. This party became very popular among the students as it advocated the abolition of caning in the senior classes. Late Mr. T. Sivalingam (Manager, People's Bank). Mr. V. A. Thirugnanasundaram (Director, Tamil Broadcasting Sri Lanka Broading Corporation), Mr. R. Thillaiampalam (Instructor of Agriculture), Mr. V. Mahadevan (Senior Executive, Mullar & Phillips) and Mr. K. Rajanayagam (Ceylon Accountancy Service –

Treasury) are some of the names that come to memory as ministers who served in my cabinet.

### Oh! Dear Vigneswara!

We hail Thee? in most veneration,
Thou hath lit the fire of wisdom
On, those that sought Thy holy kingdom
Taught them what is right and noble
Guided, to live in peace and plenty
Seeking par with all and sundry.
Thou hath made them men of character
Displaying, their merit and calibre
Whichever field they strive in venture
The brilliance still shine in lusture
There Thou stand in regal splendour
Glowing in joy on things achieved
We thy children, duty bound
Rallying round in gratitude
Our seventy five year old 'Alma Mater'
Singing songs of days in glory
To, celebrate thy Platinum Jubilee.

***

# வரலாற்றில் ஓர் ஏடு

**வீ.ஏ. திருஞானசுந்தரம், கிளைச்சங்கச் செயலாளர்.**

யாழ்/கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்களைப் பொறுத்த வரை 1992ஆம் ஆண்டு யூலாய் மாதம் 5அம் திகதி ஒரு முக்கிய நாளாகும். அதுவரை கொழும்பில் செயற்பட்டு வந்த பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை அன்றுதான் புனரமைக்கப்பட்டு, புதிய உத்வேகத்துடன் செயற்பட ஆரம்பித்தது.

இப்புனரமைப்புக் கூட்டம் கொள்ளுப்பிட்டி, “வெயிலன்ஸ்” விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இதில் முக்கியமான இருவர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர். காலஞ்சென்ற மு.சிவசிதம்பரம் (பா.உ) ஒருவர், மற்றையவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். இருவரும் அன்று நிகழ்த்திய உரைகளிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்.-

**திரு.சிவசிதம்பரம் அவர்களின் உரை:**

"1930ஆம் ஆண்டு நேருஜி அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது எங்கள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் விஜயம் செய்தார். அங்கே அவருக்கு வாழ்த்துமடல் ஒன்று வாசித்து அளிக்கப்பட்டது. அதன் இறுதிவாக்கியமாக 'நாங்கள் தவறிழைக்க மாட்டோம்' என்ற அழகிய சொற்பிரயோகத்தை அவதானித்த நேருஜி

அவர்கள் இந்த வாழ்த்து மடலில் குறிப்பிட்டுள்ள இறுதி வாக்கியப்படி நீங்கள் உறுதியாக நிற்பீர்களா? என்று அதை வாசித்தளித்த மாணவனிடம் மிக ஆர்வத்தோடு கேட்டாராம். அதற்கு அந்த மாணவன் 'நிச்சயமாக நாங்கள் தவறிழைக்க மாட்டோம்' என்று மிக அழுத்தமாக கூறினாராம்.

இந்த நிகழ்ச்சி மிக அற்புதமானது. என்னால் என்றுமே மறக்க முடியாதது. அவர்களின் எதிர்காலம் மிக பிரகாசமாக அமையும் என்று நேருஜி தனது சுயசரிதையில் எழுதியிருப்பதை அண்மையில்தான் நான் வாசித்து மிகப்பெருமிதமும் பெருமையும் அடைந்தேன். இந்த அற்புத நிகழ்ச்சி வடபகுதியில் வேறெந்த கல்லூரிக்கும் கிடைக்காத பெருமை. இது ஒன்றே எமது கல்லூரிக்குப் போதுமானது என நான் கருதுகிறேன்.

அரசியல் தலையீடுகள் மற்றும் சில காரணங்களால் இக்கல்லூரியின் வளர்ச்சியில் சிறிது தளர்வு ஏற்பட்டது உண்மைதான். இதில் எனக்கும் கூட சிறுபங்கு இருக்கலாம். எவ்வாறாயினும் இக்கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்கு கட்டி எழுப்பி வளர்த்து உயர்த்தி வைத்த பெருமையில் பெரும் பங்கு முன்னாள் அதிபரான திரு.க.சிவபாதசுந்தரம் அவர்களையே சாரும் என்பதை மிக நன்றியோடும் உறுதியோடும் குறிப்பிட விரும்புகிறேன்.

இக்கல்லூரிக்கு வடபகுதியிலிருந்து அமரர்களான பொன் கந்தையா, கே.ஜெயக்கொடி மற்றும் சிவசிதம்பரம் (நான்) ஆகிய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கிய பெருமையும் உண்டு என்பதும் நாம் மிக மகிழ்வுடன் நினைவு கூரத்தக்க நிகழ்ச்சிகளாகும்."

## பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் உரை:

"வரமராட்சியின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக மேல் நிலைப பாட்டுக்கும் கரவெட்டி வின்னேஸ்வராக் கல்லூரி பாரிய பங்களிப்பைச் செய்துள்ளது என்பதில் எவருக்கிடையிலும் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இருக்க மாட்டாதென நான் திடமாக நம்புகிறேன்.

சிறிது காலம் வீழ்ச்சியுற்றிருந்த விக்கினேஸ்வராவுக்கு அதிபராக வந்து புத்துயிரளித்த திரு.சிவபாதசுந்தரமே, இன்று பழைய மாணவர் சங்கத்தையும் இங்கு புனரமைப்புச் செய்ய முன் வந்து நிற்பது மிகப் பொருத்தமானதும் பாராட்டத்தக்கதுமாகும்.

முப்பது அல்லது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இங்கு விக்னேஸ்வரா பழைய மாணவர் சங்கமொன்று மிகச் சிறப்பாக இயங்கி வந்ததை நான் மிக நன்றாக அறிவேன். அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா எதிர்கட்சித் தலைவராகவிருந்த போது பழைய மாணவர் சங்கத்துக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அக்கூட்ட ஆரம்பத்தில் எமது கல்லூரி பற்றி அறிந்து மனதாரப் பாராட்டியது எனக்கு ஞாபகம் வருகிறது.

யாழ்ப்பாணம் பற்றிய ஆராய்ச்சிகளில் 'கரவெட்டி'யை காண முடியாமல் இருப்பது கவலைக்குரியதாகும். உண்மையில் கரவெட்டி தான் யாழ்ப்பாணம் என்ற நிலையை எம்மால் உருவாக்க முடியும்.

எந்தவொரு சிறு வேலையை கவனிக்கவும் கொழும்புக்கே வரவேண்டிய நிலை இன்றிருப்பதால் இன்று ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் மூலம் பல அரிய சாதனைகளை கல்லூரி வளர்ச்சிக்காக உங்களால் செய்ய முடியும் என நான் அழுத்திக் கூற விரும்புகிறேன். இச்சங்கத்தில் உள்ளவர்கள் அடிக்கடி சந்திக்க வேண்டியிருப்பதால் சகோதர பாசம் ஒன்று தானாகவே ஏற்படுவதுடன் இன்றைய மாணவர்களை நல்வழிப்படுத்தவும் பாரிய பங்களிப்பை செய்ய முடியும்."

## புதிய தலைவர் தெரிவு:

புனரமைக்கப்பட்ட கிளைச் சங்கத்தின் தலைவராக முன்னாள் தொழில்மன்ற நீதிபதி திரு.வே.விமலராஜா, சட்டத்தரணி, தெரிவு செய்யப்பட்டார். அன்று முதல் இன்று வரை அவரே தொடர்ந்து தலைவராக சம்பந்தப்பட்ட சகலரையும் அரவணைத்து வழி காட்டியாக விளங்கி வருகிறார். கிளைச் சங்கம் சிறப்புற இயங்கி வருவதற்கு விமலராஜா அவர்களின் சீரிய தலைமைத்துவமே காரணம்

என்றால் அது மிகையாகாது. திரு.விமலராஜா அவர்கள் சட்டத் துறையில் தான் பெற்றுக் கொண்ட அனுபவத்தை மூலதனமாக்கி சமீபத்தில் "A Practical Guide to Labour Law" என்ற நூலை வெளியிட்டார். துறைசார்ந்தவர்களும், நிர்வாகப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களும் வெகுவாகப் பாராட்டிய இந்நூல் "கம்கறு நீதியட பிராயோகிக அத்பலக்" என்ற தலைப்பில் சிங்கள மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை தமிழ் மொழியிலும் வெளியிடுவதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். விக்னேஸ் வராக் கல்லூரியின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் அவரது பங்களிப்பு மறக்க முடியாதது.

***

# ஒரு பழைய மாணவியின் ஆதங்கம்

*திருமதி மனோன்மணி நடராசா*

**மாணவியாக**

*1.* *அந்த நாட்களை நினைத்தால் - இன்றும்*
*அச்சம் மனதிலே அலையாக எழுமே*
*விந்தை யாக இருக் கிறதா - பெண்கள்*
*வீதம் மிகச்சொற்பம் வகுப்புக்கு இருவர்*

*2.* *வந்தோர் மூலையில் அமர்வோம் - ஒரு*
*வார்த்தை பேசாது அமைதியாய் இருப்போம்*
*செந்தமிழிலே கதைத்தால் - அன்று*
*சிறப்பான தண்டனை கிடைக்குமே பரிசாய்*

*3.* *கந்தை யாசேரைக் கண்டால் - ஆண்கள்*
*கப்சிப் பென்றிருப்பர் கணிதமும் நடக்கும்*
*எந்த சேர் வந்தும் என்ன - ஒரே*
*இங்கிலிஷ் மயமே எல்லாமே புதிர்தான்.*

*4.* *சொந்த மொழிதன்னை நாங்கள் - மிகச்*
*சுவையோடு கற்றிடும் நேரத்தை நோக்கிச்*
*சிந்தித் திருப்போமே விருப்பாய் - எங்கள்*
*சிற்றம் பலம்சேரும் வருவாரே மிடுக்காய்*

5. இந்தக் கவிதையை - இன்று நானும்
எழு திட வைத்தவர் அவரன்றோ அன்று
தந்த தமிழ்க்கல்வி நின்று - நெஞ்சில்
தனிநடம் புரியுதே தளர்வினை வென்று

6. கனக சபைசேரும் வருவார் - சைவம்
கற்பித்துக் கதைகூறிக் களிப்பினைத் தருவார்
தினமுமே ஆறு முகம்சேர் - எங்கள்
திகைப்பினை நீக்கிட முயற்சிகள் செய்வார்

7. தாமோ தரம்பிள்ளை சேர்தான் - எங்கள்
தலையெழுத்தைப் போலக் கையெழுத்தமைய
ஆமோதிச் சாரெங்கள் எழுத்தை - மாற்றி
அழகாக எழுதிடப் பயிற்சிகள் தருவார்.

8. வாசுதே வம்பிள்ளை சேரோ - எங்கள்
வாய்க்குள்ளே ஆங்கிலப் பாடலை நுழைப்பார்
ஆசையுடன் நாங்கள் பாட - மிக
மோசம் மோசமென்று தாவிக் குதிப்பார்.

9. பத்ம நாதப்பிள்ளை அதிபர் - மிக்க
பாசமும் கண்டிப்பும் கூடிய தலைவர்
சுத்தமான மலையாளம் - எனினும்
சுந்தரத் தமிழிலே சிலநேரம் வைவார்.

10. திருவாளர் சிவப்பிர காசம் - பின்பு
திகழ்ந்தாரே அதிபராய் மிகநீண்ட காலம்
ஒருவாறு மலையாள ஆட்சி - ஓய்ந்து
உருவானதே தமிழ் அதிபர்கள் மாட்சி.

11. திரு சின்னத் தம்பி மணியம் - நல்ல
திடமான உடற் கட்டு ஆறடி - உயரம்
வருவாரே விறாந்தையில் பவனி - ஒரு
வகையான பயபக்தி யுடன் கொள்வோம் அமைதி

12. சண்டிலில் விளையாட்டுப் போட்டி - இன்றும்
சரித்திரம் சொல்லுதே சாதனை நாட்டிக்
கொண்டகைப் பந்தாட்ட வீரர் - அன்று
கொழும்பு வரை சென்று வென்றாரே சூரர்

13. தும்பளை புலோலி துன்னாலை இன்னும்
தூரத்துள் ளோருக்கும் இப்பாடசாலை
நம்பிக்கை யூட்டியதாலே - இங்கு
நாடிவந் தோர்தொகை கூறவொணாதே.

14. சிங்கள மாணவர் கூட - இங்கு
சேர்ந்து எம்மோடு கற்றார் சித்திநாட
மங்கலம் பொங்கிடும் ஊராம் - அந்த
மலையக மாணவர் கூடக்கற் றாராம்.

15. எந்துணை மகிழ்வுடன் கற்றோம் - அன்று
எண்ணிய பயன்களை இன்று நாம் - பெற்றோம்
புத்தகப் பையுடன் தாண்டும் - அந்தப்
பொன்னாளென் வாழ்வினில் வாராதா மீண்டும்?

**ஆசிரியையாக**

1. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டு
ஆசிரிய ராக இங்கு திரும்பிவந்த ஆண்டு
நேயமுடன் கல்விகற்ற இடத்திற்கு மீண்டு
நிமிர்ந்தநடை யோடுவந்தேன் நினைவலைகள் நீண்டு
போயொதுங்கப் புன்னகையோ டெதிரினிலே ஒருவர்
பொலிவோடு வீற்றிருந்தார் 'இவரே எம் அதிபர்'
தாயெனக் கல்லூரி யினைத் தான்போற்றும் அறிஞர்
தரமான தலைவர் என்றார் ஓர் சக ஆசிரியர்.

2. கட்டடங்கள் கண்ணீரண்டைச் சுற்றிடவே செய்ய
கணக்கற்ற மாணவர்கள் கல்விகற்று உய்ய
நெட்டநெடு மாடியெல்லாம் நிரந்தரமாய் வைத்து
நிலையான பணிசெய்தார் யாரென்றதி சயித்து

மட்டற்ற மகிழ்ச்சியுடன் வகுப்பறைக்குள் நுழைந்தேன்
மாணவரின் மதிநலத்தை யறியமனம் விழைந்தேன்
தட்டுத்தடு மாறியங்கு விழப்பார்த் தேன் அன்று
தரங்கண்டு பயந்தேனென் தகுதிகுறைவென்று

3. விக்னேஸ் வராவினிலே கற்பித்த காலம்
விண்ணுலகு ஏகும்வரை நெஞ்சிலே வாழும்
தக்கவொரு அதிபர் சக ஆசிரியர் உதவி
தரமறிந்து யாவர்க்கும் வழங்கப்படும் பதவி
எக்காலமும் நடன சங்கீதப் போட்டி
எத்தனையோ பரிசுகளைக் கல்லூரிக் கீட்டித்
திக்கனைத்தும் புகழ்பரப்பக் கட்டுரை நாடகங்கள்
திறமைமிகு பேச்சுவினா விடைப்போட்டித் தினங்கள்

4. பரிசளிப்பு வரவேற்பு வாழ்த்து கலைவிழாக்கள்
பாங்குடனே சமயநிகழ்ச் சிகள்பிரியா விடைகள்
உரியமுறை யில்தாப கர்நினைவு தினங்கள்
உளத்தைவிட்டு அகலாத பொருட்காட்சி நலங்கள்
பெரிய கல்லூ ரிகளுடனே போட்டியிட்டு வெற்றி
பெற்றுவந்து பீடுடனே நிற்கின்ற பெற்றி
அரியபல் கலைக்கழக அனுமதியில் உயர்ச்சி
அனைத்துமே அதிபர்ஆ சிரியரது முயற்சி

5. புதிதாகக் கட்டடங்கள் எழுந்தனமா ணவர்கள்
பொலிவோடு ஆயிரத்திற் கதிகமா னவர்கள்
அதிசயமே ஆசிரியர் ஐம்பதின்மர் உலவ
அவரிடையே ஒற்றுமை என்றும் நின்று நிலவ
நதிபோல நன்னீர்மின் தொலைக்காட்சி வசதி
நாடி நின்ற யாவையுமே பெற்றுவிட்ட குழவி
குதிபோடு வதுபோலக் குதூகலமாய்த் தாண்டும்
கோலா கலநாள்கள் வாராதா மீண்டும்?

***

# காலத்தால் தளராத தரிசனங்கள்

விக்னேஸ்வராக் கல்லூரிக்கு 75 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அக்கல்லூரியில் 1940 களில் படித்த ஒரு மாணவன் என்னும் வகையில் அக்கல்லூரி அக்காலத்தில் இயங்கிய முறைமை பற்றியும், பின்நோக்காகப் பார்க்கும் பொழுது நமது பிற்கால ஆளுகை உருவாக்கத்துக்கு விக்னேஸ்வரா தந்த கல்வி உதவிய முறைமை பற்றியும், மிகச் சுருக்கமாகவேனும் எடுத்துரைக்க வேண்டுவது கடமை யெனக் கருதுகிறேன்.

தாயை மறந்த கதை நமது பண்பாட்டில் என்றுமே போற்றப்படாதது. அது நமது இயல்பும் அல்ல.

இதுவும் "தாயை" மீள நினைக்கும் ஒரு கதைதான். இந்தத் தாய், தாய்க்குத் தாய் ஆனவள், அறிவைத்தந்தவள், ஆற்றல்களை இனங்கண்டறிந்தவள். வழிப்படுத்தியவள்.

1940 களில் விக்னேஸ்வரா பற்றிய மீள் நினைவுகள் பற்றிய தித்திப்பு முதலில் எனக்கு நான்கு விடயங்களை முக்கியமாக்கு கின்றன.

முதலாவது, கிராமத்தின் நடுமையத்திலிருந்து கொண்டு அந்தக் கிராமத்தின் பண்புகளையும் உள்ளடக்கி நின்ற இந்தக் கல்லூரி எம்மை, நாம் அதை விட்டு வெளியேறிய பொழுது, வெளியுலகில்

தன்னம்பிக்கை உடையவர்களாகவும், முன்னுக்கு வர உழைப்பவர் களாகவும் எவ்வாறு ஆக்கியது என்பதுதான். அதாவது ஒரு கிராமத்து ஆங்கிலப் பாடசாலை எவ்வாறு நாம் உலகை எதிர்நோக்க உதவிற்று என்பதாகும்.

இரண்டாவது விக்னேஸ்வரா மாணவரிடத்தே அது எவ்வாறு ஓர் அறிவுப்பணியுணர்வையும், படாடோமற்ற 'ஒறுப்பான' வாழ்க்கை நோக்கையும் ஏற்படுத்திற்று என்பதாகும்.

மூன்றாவது அது எவ்வாறு வடமராட்சியின் இந்துக் கல்விப் பாரம்பரியத்தின் முக்கிய மையமாக அமைந்தது என்பதாகும்.

நான்காவது, எவ்வகையில் இக்கல்லூரி கரவெட்டிப் பண்பாட்டின தும், நெகிழ்ச்சிகளினதும், வளர்ச்சிகளினதும் முக்கிய வெளிப்பாடாக அமைந்தது என்பதாகும்.

இந்த நான்கு பெரும் பண்புகளுக்குமுரிய காரணங்களைக் கண்டறிவது சிரமமன்று.

முதலாவது, இந்தப் பாடசாலையின் ஆசிரிய "பரம்பரை" மிகச் சிறந்தது. அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்து கடமை ஆற்றிய ஆசிரிய மணிகள் திருவாளர்கள் அச்சுதன்பிள்ளை, கோவிந்த பிள்ளை, பத்மநாபபிள்ளை, வாசுதேவன்பிள்ளை, விஸ்வநாதன், கோஷி, சாஸ்திரி, அனந்தேஸ்வரன் முதலியோர் இக்கல்லூரியின் ஆரம்ப வகுப்புக்களில் ஆசிரியர்களாக விளங்கினர். நம்மூர் ஆசிரியர்கள் திருவாளர்கள் முருகேசு தாமோதரம்பிள்ளை, ஆறுமுகம், கந்தையா, கரவெட்டியைத் தாயகமாக கொண்டிராத ஆசிரியர்கள் திருவாளர்கள் அருணாசலம், சோமசுந்தரமூர்த்தி, சோமசுந்தரம், சிவசிதம்பரநாதன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் கல்விக் கடப்பாடு வியக்கத்தக்கது. மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தேவை ஊழியமாகக் கொண்டவரின் கதை அது.

இரண்டாவது, கல்லூரியில் குறிப்பாக மேல் வகுப்பு மட்டங்களில் நிலவிய ஒரு சனநாயகப் பாரம்பரியம், மற்றைய பெரிய பாடசாலைகளில் "பிறிபெக்ற்" (Prefect) முறைமை நிலவ, நமது

கல்லூரியிலோ ஜே.எஸ்.சி. (Junior School Certficate) மேல், மாணவர்கள், கல்லூரியின் மாணவநிலை நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய முறைமையில் நிலவிய "பாராளுமன்ற முறைமை" ஆகும். மாணவப் பொறுப்பாளர்கள் (சுகாதாரம், கல்விவசதி, மேற்பார்வை, ஒழுக்கம் ஆகியன) பாராளுமன்றத்தில் மந்திரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். 1945 இலோ 1946 இலோ நான் சுகாதார மந்திரியாகவும்) பாராளுமன்றத்தில் மாணவ நிர்வாகம், மாணவத்தேவைகள் பற்றிய காரசாரமான விவாதங்கள் நடைபெறுவது வழக்கம். இந்தப் பயிற்சி பிற்கால வாழ்க்கைக்கு மிக முக்கியமானதாக அமைந்தது.

விக்னேஸ்வராவை நாற்பதுகளில் மேன்மைப்படுத்திய இன்னொரு முக்கிய அம்சம். பாடசாலை முகாமைத்துவத்தின் “கரந்துறை” தன்மையாகும். அக்காலத்திற் பாடசாலையின் முகாமையாளராக இருந்த முதலியார் சின்னதம்பி, ஆசிரியர்களை மதித்தவர். பள்ளிப்பிள்ளைகள் தமது ஆசிரியர்கள் பால் வைத்த மதிப்பைக் குறைய விடாத முறையில் ஆசிரியர்களுடன் நடந்து கொண்டவர்.

இவையாவற்றுக்கும் மேலாக முக்கியமாக எடுத்துக் கூறப்பட வேண்டுவது, விக்னேஸ்வரா வடமராட்சியின் முதனிலை சைவ ஆங்கிலக் கலாசாலையாக விளங்கியமையாகும். இதனால் பருத்தித்துறை, தும்பளை, புலோலி, துன்னாலை, அல்வாய், உடுப்பிட்டி, அச்சுவேலி, கரணவாயிலிருந்தெல்லாம் மாணவர்கள் இங்கு வருவர்.

இதனால் குறிப்பாக உயர்வகுப்புகளில் மாணவர்களின் பழகுவட்டம் மிக அகன்றதாக இருந்தது. கரவெட்டிக்குள் இருந்து கோண்டே கரவெட்டியை மீறிய, கிராம வரையறைகளுக்கப்பாலான ஒரு தொடர்பு நிலவியது. இத்தொடர்புகள் பிற்காலத்தில் உத்தியோக வாழ்க்கைகளிற் பலருக்குப் பெரிதும் உதவிற்று.

ஆனால், அதே வேளையில் விக்னேஸ்வரா கரவெட்டிப் பண்பாட்டில் இறுகக் காலூன்றி நின்றது. இதில் முக்கியம் என்னவென்றால், கரவெட்டியின் சமூகப் பண்பாட்டில் காணப்பட்ட ஓர்

இறுக்கப்பாடு கல்லூரியிலிருக்காது போனமையாகும். கல்லூரியிற் பல "சமூக"மாணவர்களும், சமமானவர்களாகவே உலவினர். அளவளாவினர். தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி வழங்குவதிலும் கூட விக்னேஸ்வரா பெரிதும் பின்நிற்கவில்லை. யாழ்ப்பாணத்தின் சில சைவக் கல்லூரிகள் 1960 களுக்குப் பின்னரே சிறந்த ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க விக்னேஸ்வராவிலோ (பத்மநாப பிள்ளையின் நாமம் வாழ்க) 1947 இலேயே அச்சாதனை ஈட்டப்படலாயிற்று.

1960 களுக்குப் பின், குறிப்பாக கல்லூரி அரசாங்கத்தாற் கையேற்கப்பட்ட பின், விக்னேஸ்வராவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக ஆசிரியர் நியமனங்களைக் குறிப்பிடலாம். 1970 களிலும் பின்னரும் எனது நண்பர்களே அதிபர்களாயினர். அவர்களில் சிலர் மிகத்துடிப்பான கடமை வீரர்களாக மிளிர்ந்தனர்.

ஆனால் 1930, 1940 களில் விக்னேஸ்வராவின் முக்கிய பங்களிப்பு, இடைநிலை அரச உத்தியோகத்தர்களாகப் பின்னர் மேற்கிளம்பியவர்களின் உற்பத்தித் தளமாக அமைந்ததுதான்.

90 களின் விக்னேஸ்வரா, விசாலமான பரிமாணங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. விக்னேஸ்வரா ஆசிரியர்களினது பெருமைகளும், மாணவர்களது சாதனைகளும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. விக்னேஸ்வராவுக்குள்ளிருந்தே ஒரு கதிர்காமநாதனும், ஒரு ரஞ்சகுமாரும் 1970, 1980 களில் வெளிவந்தனர் என்பது இக்கல்லூரிக்குப் பெருமை தரும் விடயங்களாகும்.

நிறுவனங்களின் சீவியத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படலாம். அது இயற்கையின் நியதி. ஆனால் அந்த ஏற்ற இறக்கங்களினூடேயும் அந்த நிறுவனம் தனது இலட்சியத்தை கைவிடாது பேணிப் போற்றி வளர்க்க வேண்டும்.

"உண்மை வெல்லும்" " நாங்கள் (எதிலும், எப்போதும்) தளர மாட்டோம்" என்பது நமது கல்லூரியின் கவச வாசகம். தாரக மந்திரம்.

இது விக்னேஸ்வரா தனது மாணவர்களுக்கு மாத்திரமல்லாது உலகுக்கே போதிக்கும் உற்சாகப் புத்திமதி. இந்த வாசகத்துக்கு, இன்று ஒரு புதிய கருத்துப் பரிமாணம் உண்டு. அதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பத்தோடு பதினொன்றாக நாமும் சேர்ந்து பரீட்சைப் பந்தயத்தை மாத்திரம் கல்வியின் ஒரே முடிவாகக் கொள்ளாது, பரீட்சைகளுக்கு அப்பால் நிற்கும் கல்வி விழுமியத்தையும் சமூகக் கட்டுப்பாட்டையும் பொறுத்த வரையிலும், "உண்மையே வெல்லும்:"

***

# ஞான தினகரன்

**பண்டிதர் கை.நமசிவாயக் குருக்கள் பழைய மாணவர்.**

இந்துப் பண்பாட்டின் அடிப்படை, சமயக் கல்வியிலேயே தங்கியுள்ளது. வேதகாலந் தொடக்கம் 18ம் நூற்றாண்டு வரை கல்வி என்றால் சமயக் கல்வியையே குறித்தது. குருகுலம், திண்ணைப் பள்ளிக்கூடம் ஆகியன சமய நூல்களையே தமது பாடத்திட்டமாகக் கொண்டன. இவ்வித போக்கு ஐரோப்பியர் காலத்து ஆரம்பம் முதல் தேய ஆரம்பித்தது. ஆங்கிலேயர் காலத்தில் அது சுவடு தெரியாமல் மறைந்தது.

ஆங்கிலேயர் தமது ஆட்சியில் மதமாற்றத்தையே பெரிதும் விரும்பினர். சைவர்களை மதமாற்றம் செய்வதற்குப் பல வழிவகைகளக் கையாண்டனர். அரசாங்க உத்தியோகத்தை அளித்தல், ஆங்கிலமொழிப் பாடசாலைகளை நிறுவுதல், இவர் தம் பிரதேச மொழிகளைக் கற்றல் என்பன அவை. இவற்றுள் சைவ சமயத்தவர்களை மிகவும் கவர்த்தவை அரச உத்தியோகமாகும். இதற்கு உறுதுணையாக ஆங்கிலமொழியையும் கற்க சைவசமயத்தவர் ஆர்வம் காட்டினர். இதனால் சிலர் கிறிஸ்தவராகினர்.

இந்த நிலை சைவ பாரம்பரியத்தில் வாழ்ந்த பெரியார்களுக்கு மிகவும் வேதனையைத் தந்தது. இவ்வேதனைக்கு மருந்தாக யாழ் குடாநாட்டில் பல சைவப் பாடசாலைகள் உருவானபோது, கரவெட்டியிலும் நான்கு கல்வி நிலையங்கள் உருவாகின. இவ்வாறு உருவாகிய இக்கல்வி நிலையங்கள் முகாமைத்துவப் பெயர்களுடன்

இயங்காது **விக்னேஸ்வராக் கல்லூரி**, விநாயகர் வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், மாணிக்கவாசகர் வித்தியாலயம் எனச் சிவம் விளக்கும் நலம் பொலிந்து விளங்கின.

இந்நான்கு கல்வி நிலையங்களும் உருவாக முன்னின்று உழைத்தவர் சிற்றம்பல முதலியாராக வாழ்ந்த "சித்தமணியம்" என்று கூறுவதில் பெருமிதம் உண்டு.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்"

என்னும் பொது மறைக்கிணங்க தொழுவதற்கென இரு ஆலயங்களும் தோற்றம் பெற்றன. இவ்வாலயங்களில் ஒன்று கரவை வெல்லன் விநாயகர் ஆலயம், மற்றயைது தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம். ஆலயங்களும் வித்தியாலயங்களும் சைவப் பண்பாட்டினை வளர்த்தெடுப்பதில் முன்னின்றுழைத்தன.

விக்னேஸ்வராக் கல்லூரி ஆங்கிலக் கல்லூரியாக விளங்க சரஸ்வதி வித்தியாலயம் மகளிர் வித்தியாலயமாக விளங்கியது. கரவெட்டி, கரணவாய் முதலிய கிராம மாணவர் கிறிஸ்தவ உயர் கல்லூரிகட்குச் செல்லாது, அறிவு நிரம்பிய கல்வியையும், ஆங்கிலக் கல்வியையும் அருகிலேயே பெறும் வாய்ப்பைத் தாபகர் சித்தமணியம் தந்த பெருமை அவருக்குரியதே.

விக்னேஸ்வராக் கல்லூரி தனக்கெனப் பல்வளங்களையும், பெருமையையும் தேடிக்கொண்டு இப்போது வீறுநடை போடுகிறது. உயர்கல்வி கற்க உய்வு தேடித்தருகிறது. ஆங்கிலம், தமிழ் மட்டுமன்றி சைவம் விளங்கும் வடமொழியும் அன்று கற்பிக்கப்பட்டது. அதனால் மெய்ஞ்ஞானக்கல்வி தளிர்விட்டு ஓங்கியது. பாடசாலை ஆரம்பிக்கும்போது முடிவுறும்போதும் திருமுறைகள் ஓதப்பட்டன.

கல்விக்காக திருநீற்றை மறந்து ஒளியிழக்க வேண்டிய நெற்றிகள் ஒளிபெற்றன. வற்றாத அருள்சுரக்கும் வள்ளல்களும், ஆசான்களும் வாழ்ந்து காட்டி வாழ்வளித்தனர். வெள்ளி, செவ்வாய்

விக்னேஸ்வரா மாணவர்களுக்குத் தெரியும் சைவசிந்தனைகள், அவர்களின் சிந்தனைகள் ஆகியன. தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி முடிவிலாத பொருளைத் தேடி ஆலயம் அடைந்தனர். 'தேடிக் கண்டு' ஆனந்தத் தேன் பருகினர்.

இரு ஆலயங்களிலும் பெருவிழாக்காலம் அண்மித்தவுடன் விக்னேஸ்வராக் கல்லூரி மாணவரின் தொண்டு மதிப்பிட முடியாதது. இறைபணி செய்வதில் இக்கல்லூரி மாணவர்கள் வெட்கப்படுவ தில்லை, பின்நிற்பதில்லை. “என்கடன் பணி செய்து கிடப்பதே” என்னும் மனோபாவத்தைபெற உதவியது கல்லூரிக் கல்வியே என்று சொன்னால் மறுப்பதற்கில்லை.

விக்னேஸ்வராக் கல்லூரி ஈன்றெடுத்த மக்கள் உயர் உத்தியோகங்களை வகிக்கின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வாறு உயர் பதவிகளை வகித்தபோதிலும் தீட்சை பெற்று முன்குறி தரிப்பதையோ, விரதங்களை அனுட்டிப்பதையோ அவர்கள் மறப்பதில்லை. அதற்காக வெட்கப்படுவதுமில்லை. பசுமரத்தாணி போல சமயக்கல்வி நன்கு பதிந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

விக்னேஸ்வராக் கல்லூரியில் புதிய மாணவர் ஒருவர் சேர விரும்பின், கல்லூரி நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வடமராட்சியிலேயே தனிப்பட்ட பண்பாட்டையுடையதாக எங்கள் இக்கல்லூரி மிளிர்கிறது. புதிய ஆசிரியர் கல்லூரியில் நுழையும்போது கல்லூரியின் பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகளை ஏற்க வேண்டியவராவார். முகாமைத்துவக் கல்லூரியாக இருந்த காலத்திலும் அரசினர் கல்லூரியாக மாறிய காலத்திலும் இந்தநடைமுறை தொடரும் பண்பாடாகவே விளங்குகிறது. அதைக் கல்லூரி காப்பாற்றிக் கொண்டிருப்பதில் பெருமையடைகிறோம். உதாரணமாக கல்லூரியில் நடைபெறும் விருந்து வைபவங்கள் இன்றும் சைவ சமயிகளின் விருந்தாகவே நடைபெறுகின்றன.

கல்லூரியில் தெய்வம் உண்டு. விநாயர், கலைமகள், நடராசர் படங்கள் வழிபாட்டுச் சின்னங்களாயின. வெள்ளிக்கிழமை தோறும் ஆராதனை வழிபாடு நடைபெறுவதால், மாணவர் பிரார்த்தனையுடன் தரிசனப்பலனையும் பெற்றுக் கொள்வர். குருபூசைதினங்கள்,

நவராத்திரி விழா ஆகியவற்றைக் கல்லூரி கொண்டாடுவதன் மூலம் சமய அறிவைக் கல்லூரியானது மாணவர்கட்கு அளித்துப் போற்றுகிறது; ஏற்கிறது.

சமய வழிபாட்டில் 1960ஆம் ஆண்டு புதிய திருப்பமொன்றைக் கல்லூரி கண்டது. அப்போது கல்லூரி முகாமையாளராக விளங்கிய திரு.கே.சி.நடராஜா அவர்கள் "நடராசர் விக்கிரகம்" ஒன்றை தென்னிந்தியாவிலிருந்து தருவித்து வணக்கத்துக்கென அமைத்துக் கொடுக்க வழி செய்தார். அவ்வாறாயினும் அவ்விக்கிரகம் ஆகம முறைப்பாடியாக பாடசாலைச் சூழலில் பேண முடியாதென்ற காரணத்தினால் அதற்கு உரிய அந்தஸ்து அளிக்கப்பட்டது.

கல்லூரியில் அதிபர்கள் பலர் பதவி வகித்துச் சென்றிருக் கிறார்கள். தவம் விளக்கும் அதிபர்களைப் பெற்ற கல்லூரியேயன்றி, தவம் விளைக்கும் அதிபர்களை அது பெறவில்லை. அவ்வகையில் அது புண்ணியம் செய்தது.

கல்லூரியின் வாசலில் நுழையும்போதே சைவத்தின் மணம் வீசுகிறது. ஓங்கார வடிவு வரவேற்கிறது. ஓங்கார வளைவிலேயே கல்லூரியின் பெயர் உயர்ந்து நிற்கிறது. ஆதார ஒளி அழைக்கிறது. ஆரம்ப வகுப்பு முதல் உயர் வகுப்பு வரை சமயம் கற்றற்பயன் இந்து மாமன்றமாக உருவாகியுள்ளது. கல்லூரியின் சைவப் பணி வளர்ச்சி பெற விக்னேஸ்வரன் அருள் என்றென்றும் தோன்றாத்துணையாயிருக்க அவனடி இறைஞ்சுவோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

***

# பத்தாண்டு காலப் பதிவுகள்
# 1992-2002



# இராமாயணம்
## (நாட்டிய நாடகம்)

யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை

10.08.2002